## ‘நீட்’ தேர்வு: த.வெ.க. அரசு இரட்டை வேடம்! அனுமதி மறுப்பு!

# சென்னையில் பல்லாயிரக்கணக்கில் மாணவர்கள் திரண்டனர்!

## போலீசார் தடியடி! மாணவிகள் படுகாயம்!

சென்னை, ஜூலை 23 -

நீட் நுழைவுத்தேர்வுக்கு எதிராக சென்னையில் மாணவர் அமைப்புகள் இரண்டாவது நாளாக நேற்றும் போராட்டம் மேற்கொண்டனர். போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது போலீசார் கண்மூடித்தனமாக தாக்கியதில் பெண்களுக்கு எலும்பு முறிவு ஏற்பட்ட நிகழ்வு அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

சென்னை எழும்பூர் ராஜரத்தினம் மைதானத்தில், நீட் தேர்வை ரத்து செய்ய வேண்டும், ஒன்றிய அமைச்சர் தர்மேந்திர பிரதான் பதவி விலக வேண்டும், டெல்லியில் போராடிய மாணவர்களை தாக்கிய ஒன்றிய அரசை கண்டித்து SFIDYFI அமைப்பினர் 48 மணி நேர தொடர் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்களை போலீசார் குண்டுகட்டாக தூக்கிச் சென்று கைது செய்தனர். மாணவர்கள் மீது அடக்குமுறையை ஏவி, நீட் தேர்வுக்கு எதிரான போராட்டத்தை ஒடுக்கும் தவெக அரசுக்கு எதிராக கண்டனம் தெரிவித்த மாணவர்கள், தமிழ்நாட்டில் அவசரநிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதா? என்று கேள்வி எழுப்பினர். ‘நீட்’டுக்கு எதிராக போராடுகின்ற மாணவர்களை கைது செய்வது, போராட்டம் நடத்தக்கூடாது என கூறுவது என்பது எந்த வகையில் நியாயம் என்றும் போலீசாரிடம் மாணவ அமைப்பினர் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

நேற்றைய தினமும் சென்னையில் போராட்டம் நடத்திய மாணவர்களை வலுக்கட்டாயமாக கைது செய்தனர். போலீஸாரின் கண்மூடித்தனமான





தாக்குதலில் 4 மாணவ, மாணவிகளுக்கு எலும்பு முறிவு ஏற்பட்டது. அத்துமீறும் போலீசாரின் நடவடிக்கைக்கு மாணவ அமைப்புகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

**மதுரையில் போராட்டம்!**

இதேபோல, மதுரையில் இந்திய ஜனநாயக வாலிபர் சங்கம் (DYFI) மற்றும் இந்திய மாணவர் சங்கம் (SFI) சார்பில் தமுக்கம் மைதானத்தில் உள்ள தமிழன்னை சிலை அருகே காத்திருப்புப் போராட்டம் நடைபெற்றது.

இப்போராட்டத்திற்கு அனுமதி மறுத்த காவல்துறையினர், பங்கேற்றவர்களை விரட்டி விரட்டி வலுக்கட்டாயமாகக் கைது செய்திருக்கின்றனர்.

இது தொடர்பாக மத்திய சென்னை SFI மாவட்டச் செயலாளர் தமிழைத் தொடர்புகொண்டு போராட்டக்களத்தில் என்ன நடந்தது என்பது குறித்துப் பேசினோம்.

அவர், ``நீட் தேர்வு விவகாரத்திற்கு எதிராக DYFI, SFI சார்பில் தமிழ்நாடு முழுவதும் காத்திருப்புப் போராட்டத்திற்கு அனுமதி கேட்கப்பட்டது. ஆனால் காவல்துறை அனுமதி வழங்கவில்லை. பிற மாநிலங்களின் நகரங்களில் காத்திருப்புப் போராட்டத்திற்கு அனுமதி வழங்கப்படும் நிலையில், தமிழ்நாட்டில் மட்டும் அதற்கு அனுமதி மறுக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து போராட்டத்தை மட்டும் தொடங்கினோம்.

மாலை 5:45 மணியளவில் தொடங்கிய இப்போராட்டத்தில், இரவு 8 மணிக்கு முன்பாக காவல்துறையினர் மாணவர்களைக் கைது செய்ய முயன்றனர். அப்போது காவல்துறையினர் மிகவும் முரட்டுத்தனமான முறையில் நடந்து கொண்டனர். பெண் தோழர்களின் ஆடைகளை இழுத்துத் தாக்கியும், ஒரு சிலர் அடிக்கப்பட்டிருக்கின்றனர்.

இந்தத் தள்ளுமுள்ளுவில் இரண்டு பெண் தோழர்களின் தோள்பட்டையில் பலத்த காயம் ஏற்பட்டுள்ளதுடன், ஒரு தோழர் மயக்கமடைந்தார். கைது செய்யப்பட்ட மாணவர்கள் எழும்பூரில் உள்ள சிந்து சதா மண்டபத்தில் வைக்கப்பட்டு, இரவு 10 மணிக்கு மேல் தான் விடுவிக்கப்பட்டனர்.

**மகளிர் மசோதா**

**ஆளுநர் மாளிகை முற்றுகை!**

மகளிர் இட ஒதுக்கீட்டை உடனடியாக அமல்படுத்தக்கோரி சென்னை ஆளுநர் மாளிகையை தேசிய பெண்கள் கூட்டமைப்பினர் முற்றுகை யிட்டனர். சாலையில் அமர்ந்து தர்ணா போராட்டத்தில் ஈடுபட்ட பெண்களை போலீசார் தரதரவென்று இழுத்துச் சென்று கைது செய்ததால் பரபரப்பு நிலவியது.

நாடாளுமன்றம், சட்டமன்றங்களில் பெண்களுக்கான 33 சதவீத இட ஒதுக்கீட்டை உடனடியாக அமல்படுத்த வேண்டும் என்பதை வலியுறுத்தி அனைத்து பெண்கள் கூட்டமைப்பின் சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

சென்னை சைதாப்பேட்டை ராஜீவ் காந்தி சிலை அருகில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தின் போது , மக்கள் தொகை கணக்கெடுப்பு, தொகுதி மறுசீரமைப்பு மசோதாக்களை நிறுத்திவிட்டு, 33 சதவீத இடஒதுக்கீடு மசோதாவை உடனடியாக மழைக்கால கூட்டத் தொடரில் நிறைவேற்றவேண்டும் என்பதை வலியுறுத்தி அவர்கள் முழக்கமிட்டனர்.

தொடர்ந்து ஆளுநர் மாளிகை நோக்கி செல்ல முயன்ற பெண்கள் கூட்டமைப்பினரை போலீசார் தடுத்து நிறுத்தி கைது செய்தனர். சாலையில் அமர்ந்து போராட்டத்தில் ஈடுபட்ட பெண்களை போலீசார் தரதரவென இழுத்துச் சென்று வேனில் ஏற்றியதால், அங்கு பரபரப்பு ஏற்பட்டது.

---

## பாடகர் ‘தெருக்குரல்’ அறிவு கைது கண்டனத்திற்குரியது!

# ‘நீட்’ தேர்வு மிகப்பெரிய மோசடியாக மாறியுள்ளது!

## சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் விமர்சனம்!

சென்னை, ஜூலை 23 -

பாடகர் தெருக்குரல் அறிவு கைது செய்யப்பட்டதற்கு உதயநிதி ஸ்டாலின் கண்டனம் தெரிவித்துள்ளார். நீட் தேர்வு மிகப்பெரிய மோசடியாக மாறியுள்ளது என்றும் அவர் விமர்சித்துள்ளார். தமிழக எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் வெளியிட்ட எக்ஸ் தள பதிவு வருமாறு :-

நீட் தேர்வுக்கு எதிராகக் குரல் கொடுத்ததற்காக, ராப் பாடகர் ‘தெருக்குரல்’ அறிவை கைது செய்த தமிழக அரசை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்.

**லட்சக்கணக்கான**

**மக்களின் உணர்வு!**

அவரது குரல் தமிழ்நாடு மட்டுமல்லாது, இந்தியா முழுவதும்



உள்ள லட்சக்கணக்கான மக்களின் உணர்வுகளையும் கோரிக்கைகளையும் பிரதிபலிக்கிறது. நாடு முழுவதும் நீட் தேர்வுக்கு எதிரான பேரணிகளும் போராட்டங்களும் தீவிரமடைந்து வரும் வேளையில், அறிவுவை கைது செய்யும் நடவடிக்கையை தமிழக அரசு மேற்கொண்டுள்ளது.

**நீட் தேர்வு**

**முரண்பாடுகள் நிறைந்தது!**

நீட் தேர்வை எதிர்த்து டெல்லியில் போராடும் இளைஞர்களுக்கு ஆதரவாக தாங்களும் களமிறங்க திட்டமிட்டுள்ள தமிழக இளைஞர்களுக்கு, இது ஒரு கவலையளிக்கும் செய்தியை அளிக்கிறது. நீட் தேர்வு முரண்பாடுகள் நிறைந்தது மட்டுமல்ல; அது ஒரு மிகப்பெரிய மோசடியாகவும் மாறியுள்ளது. நீட் தேர்வுக்கு எதிராக எழுப்பப்படும் குரல்கள் ஒடுக்கப்படக் கூடாது; மாறாக, அவை செவிமடுக்கப்பட வேண்டும்.

இவ்வாறு பதிவில் கூறப்பட்டுள்ளது.



கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், இராஜாக்கமங்கலம் தெற்கு ஒன்றியம், பறக்கை ஊராட்சி தி.மு.க. நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில் இராஜாக்கமங்கலம் வட்டார மகிளா காங்கிரஸ் பொதுச் செயலாளர் ரெஜினி மெரினா அவர்கள் மாவட்ட செயலாளர் வழக்கறிஞர் ரெ.மகேஷ் முன்னிலையில் தன்னை திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைத்துக் கொண்டார். நிகழ்வில் மாநில கலை, இலக்கிய பகுத்தறிவுப் பேரவை செயலாளர் என்.தில்லைசெல்வம், இராஜாக்கமங்கலம் தெற்கு ஒன்றிய பொறுப்பாளர் ஜெ.மிலன், மாவட்ட பிரதிநிதி சரவணன், மாநகர பொறியாளர் அணி அமைப்பாளர் ரா. நிஷாந்த், கழக நிர்வாகிகள் ஆறுமுகம், ஜோஸ்லின், ஞானதிசான், ராபின் உட்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

---

## திருப்பத்தூர் சட்டமன்றத் தேர்தல் முடிவை எதிர்த்து தொடரப்பட்ட

# முன்னாள் அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பனின் ரிட் மனுவை திரும்பப் பெற அனுமதி!

## சுப்ரீம் கோர்ட்டு உத்தரவு!

புதுடெல்லி, ஜூலை 23-

திருப்பத்தூர் சட்டமன்றத் தேர்தல் முடிவை எதிர்த்து முன்னாள் அமைச்சர் பெரியகருப்பன் சென்னை ஐகோர்ட்டில் தாக்கல் செய்த ரிட் மனுவை திரும்பப்பெற சுப்ரீம் கோர்ட்டு அனுமதி அளித்துள்ளது.

ஒரு வாக்கு வித்தியாசம் நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் தொகுதியில் தி.மு.க. சார்பில் போட்டியிட்ட முன்னாள் அமைச்சர் பெரிய கருப்பன் 83 ஆயிரத்து 364 வாக்குகள் பெற்றார். அவரைவிட ஒரு வாக்கு கூடுதலாக பெற்ற தமிழக வெற்றிக் கழக வேட்பாளர் சீனிவாச சேதுபதி வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட் டார்.

திருப்பத்தூர் தொகுதிக்கான தபால் வாக்கு தவறுதலாக வேறு தொகுதிக்கு அனுப்பப் பட்டதாகவும், அதை மீட்டு கணக்கில் சேர்க்க உத்தரவிட வேண்டும் என்றும், அதுவரை சீனிவாச சேதுபதி சட்டமன்ற நடவடிக்கைகளில் பங்கேற்க தடை விதிக்க வேண்டும் என்றும் பெரியகருப்பன் தரப்பில் சென்னை ஐகோர்ட்டில் ரிட் மனு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனுவை ஐகோர்ட்டு நீதிபதிகள் எல்.விக்டோரியா கவுரி, என்.செந்தில்குமார் ஆகியோர் அடங்கிய விடுமுறை கால அமர்வு விசாரித்தது. அவர்கள் மறுஉத்தரவு வரும் வரை நம்பிக்கையில்லா தீர்மானம் உள்ளிட்ட வாக்கெடுப்பு நடைமுறைகளில் சீனிவாச சேதுபதி பங்கேற்கக் கூடாது என இடைக்கால உத்தரவு பிறப்பித்தனர்.


இதை எதிர்த்து சீனிவாச சேதுபதி சார்பில் வக்கீல் யஷ் எஸ்.விஜய் சுப்ரீம் கோர்ட்டில் மேல் முறையீட்டு மனு தாக்கல் செய்தார். சுப்ரீம் கோர்ட்டு நீதிபதிகள் விக்ரம் நாத், சந்தீப் மேத்தா ஆகியோர் அடங்கிய அமர்வு இந்த மனுவை கடந்த மே 13ந்தேதி விசாரித்தது. ரிட் மனுவுக்கு பதிலாக தேர்தல் வழக்கு தான் தொடர வேண்டும் எனக் கூறி, ஐகோர்ட்டின் இடைக்கால உத்தரவுக்குதடை விதித்தது டன், பெரியகருப்பன் தாக்கல் செய்த ரிட் மனுவை சென்னை ஐகோர்ட்டு தொடர்ந்து விசாரிக்கவும் தடை விதித்தனர்.

இதையடுத்து, ரிட் மனுவுக்குப் பதிலாக பெரியகருப்பன் தரப்பில் சென்னை ஐகோர்ட்டில் தேர்தல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

**திரும்பப் பெற**

**அனுமதி**

மேலும் ரிட் மனு மீதான உத்தரவுக்காக பெரியகருப்பன் சார்பில் வக்கீல் தேவ்யானி குப்தா சுப்ரீம் கோர்ட்டில் இடையீட்டு மனுவும் தாக்கல் செய்தார். அந்த



மனுவை நீதிபதி விக்ரம் நாத் தலைமையிலான அமர்வு நேற்று விசாரித்தது.

பெரியகருப்பன் சார்பில் மூத்த வக்கீல்கள் முகுல் ரோத்தகி, அமித் ஆனந்த் திவாரி ஆஜராகி, சென்னை ஐகோர்ட்டில் தாக்கல் செய்துள்ள ரிட் மனுவை திரும்பப் பெற அனுமதிக்க வேண்டும் என்று கோரினர். மேலும், தேர்தல் முடிவை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட தேர்தல் வழக்கு ஜூலை 22ந் தேதி (இன்று) விசாரணைக்கு வருவதாகவும் தெரிவித்தனர்.

அப்போது சீனிவாச சேது பதி தரப்பில் வக்கீல்கள் யஷ் எஸ்.விஜய், பிரஞ்சல் அகர்வால் ஆஜராகி ஆட்சேபம் தெரிவித்தனர்.

**விசாரணைக்கு**

**தடை நீக்கம்**

இருதரப்பு வாதங்களையும் கேட்ட சுப்ரீம் கோர்ட்டு, பெரியகருப்பன் தாக்கல் செய்த ரிட் மனுவை திரும்பப் பெற அனுமதி அளித்தது. மேலும், ஐகோர்ட்டு ரிட் மனு விசாரணைக்கு விதிக்கப்பட்ட தடையை நீக்கியும், சீனிவாச சேதுபதியின் மேல்முறையீட்டு மனுவை முடித்து வைத்தும் உத்தரவிட்டது.

---

## ஈரோட்டில்

# ஆவின் பால் கடும் தட்டுப்பாடு!

## பொதுமக்கள் அவதி!

ஈரோடு, ஜூலை 23 -

ஈரோட்டில் பல்வேறு இடங்களில் ஆவின் பாலுக்கு கடும் தட்டுப்பாடு நிலவுவதால் பொதுமக்கள் கடும் அவதியடைந்துள்ளனர். ஆவின் முகவர்களுக்கு தினமும் வழங்கப்பட்டு வந்த 49 ஆயிரம் லிட்டர் பால், கடந்த சில நாட்களாக 45 ஆயிரம் லிட்டராக குறைக்க ப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

நிர்வாக செலவு மற்றும் பால் வரத்து குறைவு காரணமாக ஆவின் பால் விநியோகத்தை குறைத்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.